
SAINT
WILFRID

## *புனித வில்லிபிரார்ட் (658 – 738)*

இங்கிலாந்தில் பிறந்த இவருக்கு ஏழு வயது ஆகு முன்னரே பெற்றோர் இவரை ஒரு சந்நியாச மடத்தில் விட்டு வைத்தனர். அந்த மடத்தை நிறுவியவர் புனித வில்பிரிட். அவரே சிறுவனைக் கண்காணித்து வந்தார். இளம் வயதிலேயே சபையில் சேர்ந்து வார்த்தைப்பாடுகள் கொடுத்தார். கல்வி கற்கும் படியும் புண்ணியத்தில் வளரவும் 20-ஆம் வயதில் அயர்லாந்து நாட்டிற்குச் சென்று 30-ஆம் வயதில் குருப்பட்டம் பெற்றார். பின்னர் புனித ஸ்விட்பேர்ட் என்பவருடனும் வேறு பத்து சந்நியாசிகளுடனும் இவர் ப்ரீஸ்லாந்து நாட்டிற்குச் சென்றார். அங்கு புனித வில்பிரிட் நம் திருவேத்தின் விதைகளை விதைத்திருந்தார்.

இவருக்கு ஆயர் பட்டம் கிடைத்தது. நாட்டின் எந்த இடத்திலும் தமது தலைமை ஸ்தானத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம் என பாப்பு இவருக்கு அனுமதியளித்தார். உட்ரெக்ட் என்னும் நகரில் வசித்து ஒரு மடத்தை ஏற்படுத்தி சாகும்வரை அதை கண்காணித்து வந்தார்.

**சிந்தனை:**

இளம் வயதிலிருந்தே உத்தம கிறிஸ்தவ கல்வி பயிற்சி பெறுகிறவர்கள் பிற்காலத்தில் திருச்சபைக்கும் உலகுக்கும் ஏராளமான நன்மைகள் செய்வார்கள்.

**செபம்:**

ஆண்டவரே, இளமையில் இருந்தே உமது நுகத்தடியை சுமக்கும் வரத்தை இளைஞர்களுக்குத் தாரும்.